# இராணுவ நடவடிக்கைக்கு முன்பாக புலிகளின் தாக்குதல் அணிகள் மோதுகின்றன

வடக்குக் கிழக்குப் பகுதியில் மீண்டும் அமைதி நிலவுவதற்காக அமைச்சர் தொண்டமான் விடுதலைப் புலிகள் தலைவர்களுடன் சந்திக்க உள்ள இவ்வேளை பிற வடக்கில் இராணுவ முகாம்கள் பலப்படுத்தப் பட்டு வருகின்றன. இவ்வாறு சண்டே ஐலண்ட் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. இம்முகாம்களுக்கு மேலதிக அரண்கள், தளபாடங்கள் கொண்டுவரப்பட்டுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி அப்பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. எனினும் இராணுவம் புதிதாக கொள்வனவு செய்த சீன, செக்கோஸ்லவாக்கிய யுத்த வாகனங்கள் வடக்கிற்கு கொண்டு செல்லப்பட்டதா என்பது தெரியவரவில்லை எனவும் படையினரின் புதிய தாக்குதல்களை சந்திக்க விடுதலைப்

— 04 ஆம் பக்கம் பார்க்க

பக்கங்கள் நான்கு விலை ரூபா 5.00

# முரசொலி

முரசு 66 ஒலி 34 பிரசோற்பத்தி மார்கழி 16 31 - 12 1991 : செவ்வாய்

## தமிழகத்தில் கர்நாடகர்கள் மீது சிங்கள இளைஞர்கள் தாக்குதல்

தமிழ் நாட்டில் உள்ள கடலூர் பகுதியில் வாழும் கர்நாடகர்கள் மீது அங்குள்ள இலங்கைச் சிங்களவர்கள் தாக்குதல் நடத்தியதாக கர்நாடக உள்துறை அமைச்சர் தாராம்சிங் தெரிவித்துள்ளார். சுமார் பதினைந்து சிங்கள இளைஞர்கள் கர்நாடகர்கள் மீது தாக்கியதாகவும் கர்நாடகத்தில் தமிழர்கள் மீது தாக்குதல் நடத்தப்படுவதால் நீங்களும் தாக்கப்படுவீர்கள் என்று துண்டுப்பிரசுரம் விநியோகித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. கர்நாடகம் பெண்கள் தாக்கப்பட்டதாகவும் அவர்களின் குடிசைகள் எரிக்கப்பட்டதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

# இராணுவச் செலவைக் குறைக்க பாரிஸ் உதவிக்குழு கோரிக்கை!

## ஸ்ரீலங்கா உட்பட 8 நாடுகளுக்கு அறிவிப்பு

மேற்குலக நாடுகளிடமிருந்து உதவி பெறும் வளர்முக நாடுகள் தமது இராணுவ செலவுகளை குறைத்தாலே அந்நாடுகளுக்கு உதவி வழங்கப்படும் என பாரிஸில் உள்ள அபிவிருத்தி உதவிக் குழு (DAC) அறிவித்துள்ளது.

இத்தகவலை வெளியிட்டுள்ள பாரிஸுடன் எக்கனோமிக் ரிவியூ என்ற பிரபல சஞ்சிகை இவ்வுதவிக்குழுவில் ஜப்பான் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் அங்கத்துவம் வகிப்பதையும் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்தியா, பாகிஸ்தான், ஸ்ரீலங்கா, பர்மா, வடகொரியா, தாய்லாந்து, சீனா ஆகிய நாடுகளின் இராணுவ செலவினங்கள் அதிகரிப்பு கவலை தருவதாக அபிவிருத்தி உதவிக்குழு குறிப்பிட்டுள்ளது

அபிவிருத்தியடைந்து வரும்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## கர்நாடகம் நஷ்டஈடு தருமாறு தமிழக அமைச்சரவை கோரிக்கை

கர்நாடகத்தில் தமிழ் நாட்டவர்களுக்கு எதிராக நடைபெற்ற வன்முறைகள் குறித்து ஆராய முதலமைச்சர் ஜெயலலிதா தலைமையில் நேற்று விசேட அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது.

வன்முறையில் பாதிக்கப் பட்டவர்களுக்கு கர்நாடகம் நஷ்டஈடு தரவேண்டும், இது குறித்து விசாரணைக்குழு அமைக்கப்படவேண்டும், தமிழகம் வந்துள்ளவர்களை அகதிமுகாமில் வைத்து பராமரிப்பதற்கான செலவை தமிழகத்திற்கு மத்திய அரசு தரவேண்டும் போன்ற கோரிக்கைகளை தமிழ்நாடு அமைச்சரவை நேற்று விடுத்துள்ளது.

இதேவேளை கர்நாடகத்திலிருந்து தமிழகத்திற்கு 70

## கடற்படைப்படகு மூழ்கடிப்பு

ஐ. தே. க. செயற்குழு அறிவிப்பு

## வட, கிழக்கு பிரச்சினைக்கு பலதரப்பு தீர்வு அவசியம்

வடக்கு கிழக்குப் பிரச்சினைக்கு பல தரப்பு தீர்வே காணப்படல் வேண்டும். ஒரு தரப்பு தீர்வு காணப்பட்டால் இனவாதம் தூண்டப்பட வழி வகுத்துவிடும் என நேற்று ஆளும் ஐ.தே.க செயற்குழு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற தெரிவுக்குழு மூலம் சமரசமான முறையில் தீர்வுகளை காணலாம் இறுதி தீர்வு எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படக் கூடியதாக இருக்க வேண்டும் எனக்குறிப்பிட்டுள்ள ஐ.தே.க செயற்குழு உறுப்பினர்கள் தனிப்பட்ட ரீதியில் அறிக்கைகளை வெளியிடுவதை தவிர்க்குமாறும் கேட்டுள்ளது.

இராணுவ நடவடிக்கைகள் அவசியமானவை என ஏற்றுக்கொண்ட ஐ.தே.க செயற்குழு பொதுவான இணக்கம் மூலமே நிரந்தர தீர்வுகாண முடியும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளது.

## தமிழர்களில் யார்புலி யார்புலி இல்லை என அடையாளம் காண முடியாது

### - தொண்டமான்

''ஒரு இன்சூரன்ஸ் ஏஜென்ட் டைப் போல நான் எனது சமாதானத்திட்டத்தை எல்லாக் கட்சியினருக்கும் விற்பனை செய்திட சங்கற்பம் பூண்டுள்ளேன்.''

தொண்டமான் சண்டே டைம்ஸுக்கு அளித்தபேட்டியில் குறிப்பிட்டார்

ஜே. வி. பியினர் ஆயுதம் ஏந்திய பல கோரிக்கைகள் விட்டும் ஜனாதிபதி ஆட்சி முறை அகற்றப்பட வேண்டு

மக்களிடையே யார் புலி யார் புலி இல்லை யென்பதை அடையாளம் காணமுடியாது மேலும் இருசாராரினது செயற்பாடு மாறுபட்ட ஒரு

## கடற்படைப்படகு மூழ்கடிப்பு ஸ்ரீலங்கா ஒப்புக்கொண்டது

நேற்று முன்தினம் யாழ் குடா கடல் நீரேரியில் கடற் படையின் படகு ஒன்று புலிகளால் மூழ்கடிக்கப்பட்டதை ஸ்ரீலங்கா பாதுகாப்பு வட்டா ரங்கள் ஏற்றுக்கொண்டுள் ளன.

இத்தாக்குதலில் 3 கடற் படையினர் படுகாயமடைந் ததாகவும் கடற்படையின ருக்கு விமானப்படை ஹெலி

— 04 ஆம் பக்கம் பார்க்க

## சோடி 30 ரூபாவாக விற்பனை

## சவர்க்காரங்களின் விலை நேற்றுத் திடீர்வீழ்ச்சி

யாழ். குடாநாட்டில் உள்ள முக்கிய சந்தைகள், வீதி யோரங்களில் நேற்று சவர்க் காரங்களின் விலை திடீரென வீழ்ச்சியடைந்துள்ளது.

ஒரு கோடி சவர்க்காரம் 30 ரூபா முதல் 35 ரூபா வரை மக்களைக் கூப்பிட்டு விற்கப்பட்டதாக தெரிவிக் கப்படுகிறது.

ஆனால் மக்கள் சவர்க்

— 04 ஆம் பக்கம் பார்க்க

இதேவேளை கர்நாடகத்தி லிருந்து தமிழகத்திற்கு 70

— 04 ஆம் பக்கம் பார்க்க

## மூழ்கிய கடற்படை படகிலிருந்து ஆயுதங்கள் மீட்பு!

நேற்று முன்தினம் குடா நாடு கடல் நீரேரியில் கடற் புலிகளால் மூழ்கடிக்கப்பட்ட கடற்படை படகில் இருந்து புலிகளால் ஆயுதங்கள் மீட் கப்பட்டுள்ளன.

மூழ்கிய படகிலிருந்து ரி-56 2 ரி-81-1, ரி-56 ரவை

— 04 ஆம் பக்கம் பார்க்க

## 'ஓ'குறூப் இரத்தம் அவசியம் தேவை

யாழ் போதனா வைத்திய சாலை இரத்த வங்கிக்கு நோயாளிக்கு ஏற்றுவதற்கு 'ஓ' பொசிற்றிவ் இரத்தம் உடன் வேண்டப்படுவதாக இரத்த

—,04 ஆம் பக்கம் பார்க்க

இன்னேன்.''

இவ்வாறு அமைச்சர்

விட்டும் ஜனாதிபதி ஆட்சி முறை அகற்றப்பட வேண்டு மெனக் கிளர்ச்சி செய்த போது அது இராணுவ ரீதியில் நசுக்கப்பட்டது. என ரி.யிக்கு மட்டும் ஏன் வேறு நிலைப் பாடு' எனக் கேட்கப்பட்ட போது திரு. தொண்டமான் ஜே. வி. பியைப் பொறுத்த மட்டில் முழுச் சமூகமும் அத னுடன் இல்லை. ஆனால் இன்று நிலை வேறு. தமிழ்

## 4 போராளிகள் வீரச்சாவு

## குச்சவெளி மோதல் 3 படையினர் பலி

திருகோணமலையில் நேற்று நடைபெற்ற மோதலில் மூன்று படையினர் பலியாகினர்.

திருமலை புடவைக்கட்டு முகாமிலிருந்து குச்சவெளிக்கு சென்ற படையினர் மீதுகன்னி முந்தல் என்ற பகுதியில்

— 04 ஆம் பக்கம் பார்க்க

செயற்பாடு மாறுபட்ட ஒரு ஜே. வி. பியைக் கைது செய் தால் அவன் சகல தகவல் களையும் தெரிவிக்கிறான். எல். ரி. ரி. ஈ. உறுப்பினர் பிடிபட்டால் அந்த நபர் சைனைட் அருந்தி தற்கொலை புரிகிறார் எத்தனை ஜே.வி.

— 04 ஆம் பக்கம் பார்க்க

## லெப்-கேணல் ஜோய் நினைவுக்கூட்டம்

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டத்தளபதியாகவிருந்து 30.11.91 அன்று ஸ்ரீலங்கா இராணுவத்தினருடன் ஏற் பட்ட மோதலில் வீரச்சாவு அடைந்த லெப் - கேணல் ஜோய் அவர்களின் 31 ஆம் நாள் நினைவுதினமும் நினை

— 04 ஆம் பக்கம் பார்க்க

# 44 வகையான அதிமுக்கிய மருந்துகள்

# யாழ் வைத்தியசாலையில் அறவே இல்லை

யாழ் போதனா வைத்திய சாலையில் முக்கியமான 44 மருந்து வகைகள் தற்பொழுது முற்றாகத் தீர்ந்து விட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த 44 முக்கிய மருந்து வகைகள் அறவேயில்லாததினால் குடாநாட்டின் பல பகுதிகளிலிருந்தும் அதிகளவில் யாழ் போதனா வைத்தியசாலையைத் தினமும் நாடி வரும் நூற்றுக்கணக்கான நோயாளர்களும், வைத்திய சாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் அதிகளவானோரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் வைத்தியசாலையில் சத்திர சிகிச்சைக்கு அவசியம் தேவைப்படும் 10 வகையான சிறு உபகரணங்களுக்கும் இங்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

மேலும் பல மருந்துகளுக்கும் வைத்தியசாலையில் தற்போது பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

இந்த மருந்துகளை அனுப்பி வைக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டிருந்த போதிலும் அவை இங்கு வந்து சேரவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதுகுறித்து யாழ்போதனா வைத்தியசாலைப் பணிப்பாளருடன் தொடர்பு கொண்ட போதிலும் உடனடியாக விவரமெதுவும் பெற முடியவில்லை.

## வயிற்றுக்குள் துவாய்!

### 10லட்சம் கோருகிறார் இளம்தாய்

கண்டி சியம்பலா தென்னையைச் சேர்ந்த திருமதி சந்திராணி குமாரசிங்க என்பவர் தனியார் மருத்துவ மனையொன்றிடமிருந்து பத்து லட்சம் ரூபா நஷ்டஈடு கோரி மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கொன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

தனக்கு மகப்பேற்று சத்திர சிகிச்சையொன்றைச் செய்த டாக்டர் வயிற்றுக்குள் மெல்லிய மருத்துவத் துணியிலான துவாய் ஒன்றை விட்டுத் தைத்துவிட்டதாகவும் இதனால் தனக்கு மனோரீதியாகவும், உடல் ரீதியாகவும் பாதிப்பு ஏற்பட்டதாகவும் வழக்கில் அவர் கூறியுள்ளார்.

இவ் வேதனைகளின் காரணமாக பெரும் செலவில் இன்னொரு சத்திரசிகிச்சையைத் தான் செய்வித்ததாகவும் அச்சத்திர சிகிச்சையின்போது டாக்டர்கள் வயிற்றுக்குள்ளிருந்து துவாயை எடுத்ததாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (08)

## நிரந்தர நியமனக் கடிதங்கள் 15 ஆம் திகதிக்கு முன் கிடைக்கும்

தெரிவு செய்யப்பட்ட தொண்டர் ஆசிரியர்களுக்கான நிரந்தர நியமனக் கடிதங்கள் ஜனவரி மாதம் 15-ம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்படவுள்ளன.

1990 இல் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த, தற்பொழுது பாடசாலைகளில் கடமைபுரியும் 8000 தொண்டர் ஆசிரியர்களே பெப்ரவரி 3 ஆம் திகதி முதல் பயிலுநர் ஆசிரியர்களாக நிரந்தர நியமனம் செய்யப்படவுள்ளனர்.

இவர்களுக்கு மாதாந்தம் 1300 ரூபா சம்பளமாக வழங்கப்படும்.

## சுயேட்சை வேட்பாளர் இறந்தாலும் இனித்தேர்தல்!

சுயேட்சை வேட்பாளர் ஒருவர் இறந்தாலும் தேர்தலை ஒத்திவைக்காது அத்தொகுதியில் தேர்தலைத் தொடர்ந்து நடாத்தக்கூடிய வகையில் இந்திய தேர்தல் சட்டத்தில் திருத்தம் செய்யப்படவுள்ளது.

இதன்படி முக்கிய அரசியற் கட்சி வேட்பாளர் ஒருவர் உயிரிழந்தால் மட்டுமே அத்தொகுதியில் தேர்தல் ஒத்திவைக்கப்படும்.

பஞ்சாப்பில் பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதி தேர்தல் நடாத்தப்படவுள்ளதால் அதற்கு முன்னர் இச் சட்டத் திருத்தத்தை நிறைவேற்ற அங்கு அவசரம் காட்டப்படுவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## வீட்டுப் பணியாளர்களாக 30 ஆயிரம் சிறுவர்கள்!

நாடெங்கிலும் தற்பொழுது சுமார் 30 ஆயிரம் சிறுவர்கள் வீட்டு வேலையாட்களாக உள்ளதாக சிறுவர்கள் பராமரிப்புத்திணைக்களம் கணித்துள்ளது.

இவர்கள் 8-1[illegible] வயதுக்கு இடைப்பட்டவர்களாவர். அநேகமான சிறுவர்கள் வீடுகளில் எஜமானிகளினால் துன்புறுத்தப்படுவதாகவும் சிறுவர் பராமரிப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மோசமாகக் கொடுமைப் படுத்தப்பட்டதனால் இவர்களில் பலர் இறந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## அன்பளிப்புப் பொருள்களுடன் கப்பல வருகிறது!

கொழும்பிலிருந்து அன்பளிப்புப் பொருள்களை ஏற்றிக் கொண்டு கப்பலொன்று இன்று யாழ்நோக்கிப்புறப்படவுள்ளது.

வடபகுதிலுள்ளவர்களுக்கு ஒப்படைக்கவென கொழும்பிலுள்ள உறவினர்களினால் தனியார் நிறுவனமொன்றிடம் ஒப்படைக்கப்பட்ட 125 தொன் பொருள்கள் இக்கபபலில்இங்குகொண்டுவரப்படுகிறன

அத்துடன்600 தொன் அரச நிவாரணமும் இக்கப்பலில் கொண்டுவரப்படுகிறது.

அன்பளிப்புப் பொருள்களுக்குரியவர்களுக்கு இது பற்றி உரிய முறையில் அறிவிக்கப்படுமெனவும், உதவி அரசஅதிபர் பிரிவு ரீதியாக அவை உரியவர்களிடம் ஒப்படைக்கப்படுமெனவும் சம்பந்தப்பட்ட தனியார் நிறுவனம் அறிவித்துள்ளது.

## திருமலைத் துறைமுகப் பகுதியில் சுதந்திர வர்த்தக வலயம்!

திருமலையில் விரைவில் சுதந்திர வர்த்தகவலயமொன்று அமைக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

கொழும்பு கட்டுநாயக்காவிலுள்ளதைப் போன்று இந்தத் திருமலை சுதந்திர வர்த்தக வலயமும் அமையுமெனவும், பலருக்கு அங்கு தொழில் வாய்ப்புவழங்கப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்படுகின்றது.

## தோட்டத்தொழிலாளி மனு!

அரசியலமைப்பு ஏற்பாடுகளின்படி தமிழ் மொழியிலேயே தொடர்பு கொள்வதற்குத்தான் அனுமதிக்கப்பட வேண்டுமெனக் கோரி தோட்டத் தொழிலாளி ஒருவர் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுவை ஆராய்ந்த உயர் நீதிமன்றம் அதை மேற்கொண்டும் விசாரிப்பதற்கு அனுமதி வழங்

## ஆயுதம் தூக்க விரும்பும் அறுபது வயதுப் பாட்டி

## முஸ்லிம் அமைப்புக்களுக்கிடையே முரண்பாடு!

### அம்பலத்துக்குக் கொண்டுவருகிறார் வர்த்தக அமைச்சர் மன்சூர்

முஸ்லிம் அமைப்புக்களுக்கிடையே கருத்து வேறுபாடு வளர்ந்து வருவதை வர்த்தக கப்பற்துறை அமைச்சர் மன்சூர் அண்மையில் கொழும்பில் நடைபெற்ற பொது விழாவொன்றில் வெளிப்படுத்தினார்.

மட்டக்களப்பு செண்மேரி வித்தியாலயத்தில் நடைபெற்ற விழாவொன்றில் உரையாற்றிய அவர் 'சில முஸ்லிம்கள் தம்மைத் தொண்டமானென நினைக்கிறார்கள்'

'முஸ்லிம்களுக்கென தனிக்கட்சி அமைக்கப்பட்டதன் பின்னர் பிறர் எம்மை சந்தேகக்கண்ணோடு பார்க்கின்றனர். தனிக்கட்சியொன்று முஸ்லிம்களுக்குத் தேவையென்றால் 40 வருடங்களுக்கு முன்னரே அது அமைக்கப்பட்டிருக்க வேண்டும்' எனவும் அவர் தெரிவித்தார்.

## 'பங்களூர் To பாண்டிச்சேரி' உல்லாசப் பயணிகள் பஸ்தீக்கிரை

கர்நாடகாவில் தமிழர்கள் கடத்திக் கொல்லப்பட்டு வரும் வேளையில் பாண்டிச்சேரிக்கும் பெங்களூரிலிருந்து உல்லாசப்பயணம் சென்று கொண்டிருந்த பஸ் ஒன்று தமிழ்நாடு கிருஷ்ணகிரியில் வைத்துத் தீக்கிரையாக்கப்பட்டதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

பயணிகள் வெளியே இறக்கப்பட்ட பின்னரே தீவைக்கப்பட்டதாம்.

கர்நாடகாவின் மற்றுமொரு பஸ்ஸும். இருலொறிகளும் கூட தமிழ் நாட்டில் வைத்துத் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன (8)

## 'சர்வோதய' நிறுவனமும் அரசியலில் குதிக்கிறது

தெற்கில் உள்ள முன்னணி நிறுவனமான 'சர்வோதய' இயக்கம் அரசியலில் ஈடுபடவுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது

தற்பொழுது 'சர்வோதய' நிறுவனம் பிறநாட்டு உதவிகளுடன், அரசசார்பற்ற தொண்டர் நிறுவனமாகச் செயற்பட்டு வருகின்றது.

ஆரியரட்ணாவைத் தலைவராகக் கொண்ட 'சர்வோதய' நிறுவனம் தென்பகுதி அரசியலில் சர்ச்சைக்குரிய தொன்றாகவும் இருந்து வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## ஊக்குவிப்புப் படி

யாழ் சுகாதாரத் திணைக்கள ஊழியர்களுக்கு 18 மாதங்களுக்கான கஷ்ட நிவாரண ஊக்குவிப்புப் படி கடந்த வாரம் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை மலேரியா தடுப்பு இயக்க யாழ் பிராந்திய ஊழியர்களுக்கு இந்த ஊக்குவிப்புப் படி இதுவரை வழங்கப்படவில்லை. (13)

## அரசமைக்க தமிழரின் உதவி-இனி தேவையில்லைஎன்கிறார் ஜெயசூரியா

"அரசாங்கம் ஒன்றை நிறுவும் போது தமிழினத்தின் ஆதரவு இன்றி முடியாது என்ற எண்ணத்தை இனி கைவிட்டு விடவேண்டும்" என்ற மகா விடும்" என்றும் அவர் கூறினார். (08)

## வலைபந்தாட்டப்

# ஆயுதம் தூக்க விரும்பும் அறுபது வயதுப் பாட்டி

பளையைச் சேர்ந்த 'பேராலை' என்ற கிராமத்தில் கடந்த 29 ஆம் திகதி அன்று நடைபெற்ற போர்க் காலக் கருத்தரங்கிலே கவிஞர் வாஞ்சிநாதன் உரையாற்றி முடிந்ததும் பொது மக்கள, ஆண், பெண் என்ற வித்தியாசமின்றி போராட்டத்துடன் வந்து இணையும்படி வேண்டிக்கொண்டார்.

அந்த இடத்திலே அறுபது வயது நிரம்பிய குபரிமளம் என்ற தாய் ஒருத்தி 'நானும் வருகிறேன்.. ...... நமது பிள்ளைகள் நமது மண்ணைக் காப்பதற்காக இணைந்து கொண்டிருக்கும்போது நமக்கு என்ன வீட்டில் வேலை?" என்று உணர்வு பொங்கக் கூறியபடி மேடைக்கு வந்தார்.

அவரைப் பாராட்டிய கவிஞர் வாஞ்சிநாதன், 'இவரைப் போல் நாம் ஒவ்வொருவரும் மண்காக்கப் புறப்படுவோமானால் நமது மண் விரைவில் மீட்கப்படுவது உறுதி' - என்று கூறினார்.

புறநானூறு. கலிங்கத்துப்பரணிகளிலே வரும் வீரத் தாய்மார்கள போல் இங்கு வந்துள்ள இந்தத்தாய் மட்டுமல்ல நமது தாய்க்குலமும் தந்தையர்குலமும் மாறவேண்டும். அப்போதுதான் நமது மண்ணிலே எமது தேசியக்கொடியான புலிக்கொடி பறந்து கொண்டிருக்கும் என்று கவிஞர் வாஞ்சிநாதன் அங்கு மேலும் தெரிவித்தார்.

தோட்டத் தொழிலாளி ஒருவர் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுவை ஆராய்ந்த உயர் நீதிமன்றம் அதை மேற்கொண்டும் விசாரிப்பதற்கு அனுமதி வழங்கியது.

நோர்வுட தோட்டத்தைச் சேர்ந்த மாரியப்பன் விஜயரத்தினம் என்பவர் இம் மனுவைத் தாக்கல் செய்திருந்தார்.

ஆங்கிலத்தில் தனக்கு அனுப்பபட்ட வெளியேற்ற அறிவித்தல் அரசியலமைப்பின் உறுப்புரை 22(2)பிரிவை மீறுவதாகவும் அவர் இம் மனுவில் கூறியிருந்தார். (8)

## தேவையில்லைஎன்கிறார் ஜெயசூரியா

"அரசாங்கம் ஒன்றை நிறுவும்போது தமிழினத்தின் ஆதரவு இன்றி முடியாது என்ற எண்ணத்தை இனி கைவிட்டு விடவேண்டும்" என்ற மகா போதி சங்கத்தலைவரும் முன்னாள் அமைச்சருமானகாமினி ஜெயசூரியா கூறியுள்ளார்

அம்பலாங்கொடை ஊறவத்தைத் என்ற இடத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"தொண்டமானின் ஆலோசனை நிறைவேற்றப்பட்டால் இந்த நாட்டின் சிங்கள இனம் சிறுபான்மை இனமாக மாறிவிடும்" என்றும் அவர் கூறினார். (08)

## மேதின விடுமுறை ரஷ்யாவில் இனி இல்லை

ரஷ்யாவில் மேதின விடுமுறை இனிவழங்கப்படமாட்டாது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ரஷ்யா வைதீகச் சடங்கு சம்பிரதாயங்களின் பிரகாரம் ஜனவரி 7-ம் திகதியே நத்தார் கொண்டாட தினமாகும்.

மே தினம் (மே- 1) ஒரு தொழிலாளர் விடுமுறைதினமாக இனி இருக்காது எனத் தெரிவிக்கப்படுகின்றது. (08)

## வலைபந்தாட்டப் போட்டி

நத்தார்ப் பண்டிகையை முன்னிட்டு யாழ்ப்பாணம் தொழில் நுட்பக் கல்லூரியினரால் ஒழுங்கு செய்யப்பட்ட சிநேகபூர்வ வலைபந்தாட்டப் போட்டி கடந்தவாரம், தொழில் நுட்பக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற பொழுது ஈச்சமோட்டை சனசமூக நிலைய மாதர் சங்க 'பி' பிரிவு அணியை அதனை எதிர்த்து ஆடிய யாழ் தொழில் நுட்பக் கல்லூரி விளையாட்டு அணி வெகு இலகுவாகத் தோற்கடித்தது.

செல்வி யேசுதாசன் கமலினி வெகு திறமையாக ஆடி ரசிகர்களின் பாராட்டுதலைப் பெற்றார். தீர்ப்பாளராக திருமதி றோகன் இராசசிங்கம் கடமையாற்றினார். (16)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
கல்வியாண்டு 1990/91
விவசாய பீடம்

விவசாய பீட 2-ம் வருட மாணவர்களுக்கான 1990 / 91 ஆம் கல்வியாண்டு 1992 ஜனவரி 1-ம்திகதியும், 1-ம் (புதிய) வருடமாணவர்களுக்கான 1990 / 91 ஆம் கல்வியாண்டு 1992 ஜனவரி 20- ம் திகதியும் ஆரம்பமாகும். முன்னைய விளம்பரத்தில் குறிப்பிட்ட திகதியின்படி 1- ம் வருட மாணவர்களுக்கு 01. 01 92 இல் ஆரம்பமாகமாட்டாது

பதிவாளர்

12083

# புதுவருடத்தில்போரா?சமாதானமா?

## படைத்தளபதிகளின் முரணான அறிவிப்புக்கள்

புது வருடத்தில் வடக்குக் கிழக்குப் பகுதியில் யுத்தம் திறந்த ஒரு முடிவு ஏற்பட்டு, அங்கு சமாதானம் ஏற்படுத்தப்படுமென இராணுவத்தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரட்ன நேற்றுக் கொழும்பில் தெரிவித்தார்.

ஆனால் இதேவேளை இவரது கூற்றுக்கு முரணாக ஸ்ரீலங்கா விமானப்படை, கடற்படைத் தளபதிகள் நேற்றுக் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

விமானப்படைத்தளபதி எயர் மார்ஷல் டரன் குணவர்த்தன:-

'வெளிநாடுகளிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட புது விமானங்கள் புதுவருடத்தில் வடக்குக் கிழக்கில் குண்டு வீசப் பயன்படுத்தப் படவுள்ளன இந்த நவீன விமானங்கள் வடக்கு கிழக்கில் பரவலாகத் தாக்குதல்களில் ஈடுபடும்.'

கடற்படைத்தளபதி கிளான்ஸி பெர்னாண்டோ:-

'புதிய வருடத்தில் கடற்படைக்கு பல புதியவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டு அது மேலும் பலப்படுத்தப்படும். வடக்கு கடற்பகுதியில் கடல் கண்காணிப்பு புதிய உபாயத்திற்கேற்ப புதுவருடத்தில் மேற்கொள்ளப்படவுள்ளதுடன் ஆயுதக் கடத்தல்கள் முற்றாகத் தடை செய்யக் கூடியவாறு இனி கடற்படை செயற்படும்.

### சிலுவையில் 'தொங்கிய' பாக். மதத் தலைவர்

உள்ளூராட்சித் தேர்தல்களை கிறிஸ்மஸ் காலத்தில் நடத்த வேண்டாமெனக் கோரிப் பாகிஸ்தான் தேசிய சபை உறுப்பினரான கிறிஸ்தவத் தலைவர் ஜேம்ஸ் பாலிக் சிலுவையில் தம்மை 'அறைந்து' தமது கோரிக்கையை வலியுறுத்தினார்.

தற்கொலை முயற்சி என்ற குற்றச்சாட்டின் பேரில் அவரைப் பொலிஸார் கைது செய்து விட்டனர் என்று 'ராய்ட்டர்' செய்திதாபனம் தெரிவித்தது. (08)

### விமானப்படைத் தலைமையகம் இடம் மாறுகிறது!

தலைநகரில் தற்பொழுது உள்ள விமானப்படைத் தலைமையகம் விரைவில் பாதுகாப்பான வேறு ஒரு இடத்திற்கு மாற்றப்படவுள்ளது.

இதேவேளை விமானப் படையின் பொறியியல் தொழில் நுட்பத்துறை கட்டுநாயக்காவில் இயங்கவுள்ளது

பாதுகாப்பை முன்னிட்டே இந்த இடமாற்றங்களெனத் தெரிவிக்கப்படுகின்றது.

### சாவகச்சேரியில் சந்தனக்காடு

விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தினரால் தமிழீழ மாவீரர் நாளிற்கென விசேடமாகத் தயாரிக்கப் பட்ட பொன். கணேசமூர்த்தியின் 'சந்தனக்காடு' நாடகம் இன்று 31-ம் திகதி இரவு 7 மணிக்கு சாவகச்சேரி இந்துக்கல்லூரி கலை அரங்கில் இடம்பெற இருக்கின்றது.

யாழ் குடாநாட்டின் பல பாகங்களிலும் மேடையேற்றப்பட்டு பல்லாயிரக்கணக்கானோரின் பாராட்டுதல்களைப் பெற்றுக்கொண்ட 'சந்தனக்காடு' நாடகம் இன்று முதற்றடவையாக தென்மராட்சிப் பகுதியில் இடம்பெறவிருக்கின்றது.

திருவாளர்கள அமரசிங்கம், நாகராசா, சிவபாலரன், மகேந்திரன், நாகேந்திரசீலன், உதயன், தேவர் அண்ணா, திருமதி கருணானந்தசிவம் உட்பட மற்றும் பல முன்னணிக் கலைஞர்கள் பங்கேற்கும் 'சந்தனக்காடு' நாடகம் 20 ஆவது தடவையாக இன்று சாவகச்சேரியில் மேடையேறவிருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது

10 ரூபா பெறுமதியான அன்பளிப்புச் சீட்டுக்களை மாலை 5 மணியிலிருந்து மண்டப வாயிலில் பெற்றுக் கொள்ளலாம்.

### கர்நாடகமாநில அரசு மீது நம்பிக்கையிழக்கும் தமிழர்கள்

கர்நாடக பொலிஸார் மீதும், கர்நாடக மாநில அரசு மீதும் தாம் நம்பிக்கையையிழந்து விட்டதாக கர்நாடகத்திலிருந்து தமிழகத்திற்கு அகதிகளாகத் திரும்பியுள்ள தமிழர்கள் தெரிவித்துள்ளதாகச் சென்னைத் தகவலொன்று தெரிவிக்கின்றது.

அங்கு தம்மீது தாக்குதல்கள் மேற்கொள்ள கர்நாடக அரசே தூண்டுதலாக இருந்ததாகவும், தம்மைத்தாக்குதலிலிருந்து காக்க கர்நாடகப் பொலிஸார் தவறிவிட்டதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

### போதைப் பொருள் உற்பத்தியில் இந்தியா முன்னணியில்!

சர்வதேச போதைப் பொருள் கடத்தல் தொழிலில் இந்தியா பொருள் கைமாறும் இடம் என்ற நிலையிலிருந்து போதைப் பொருள் உற்பத்தியில் முன்னணி வகிக்கும் நாடு என்ற ஸ்தானத்திற்கு வந்துள்ளது

ஐக்கிய நாடுகள் சர்வதேச போதைப்பொருள் கட்டுப்பாட்டுச் சபையின் மதிப்பீட்டின்படி உலக சந்தையில் இந்தியாவில் உற்பத்தியாகும் ஹெரோயினின் பங்கு 200 கோடி டாலர்களாக அதிகரித்துள்ளது,

இந்தியாவில் உற்பத்தியாவதில் மூன்றில் இரண்டு பங்கு வெளிநாடுகளுக்குப் போய் விடுகிறது.

டில்லி, பம்பாய், கல்கத்தா, சென்னை நகர வீதிகளில் தினம்தோறும் மூன்று கோடி ரூபாய்க்கும் அதிக பெறுமானமுள்ள ஹெரோயின் விற்பனை செய்யப்படுகிறது.

### தீவுப்பகுதிக்கு விரைவில் விசேட பரீட்சை!

தீவுப்பகுதியில் விரைவில் விசேட க.பொ.த சாதாரண தரப்பரீட்சையொன்று நடாத்தப்படவுள்ளதாக பரீட்சைத் திணைக்கள ஆணையாளர் அறிவித்துள்ளார்.

நெடுந்தீவு, நயினாதீவு பகுதிகளில் தடைப்பட்ட தமிழ், ஆங்கில பரீட்சைகளே விசேட பரீட்சைகளாக நடத்தப்படவுள்ளன.

### குறிபார்த்துச் சுடுவதில் தமிழருக்குத் தங்கப்பதக்கம்

'சாவ்' விளையாட்டு விழாவில் குப்புறப்படுத்தும் சுடும் போட்டியில் இலங்கை வீரரான எஸ். இராஜசிங்கம் தங்கப்பதக்கத்தை வென்றார்.

இவர் தொடர்ந்து 12 வருடங்களாகக் குப்புறப் படுத்துச் சுடும் போட்டியில் இலங்கைச் சாம்பியனாக விளங்கி வருகிறார்.

1982லிருந்து பலவேறு சர்வதேசப் போட்டிகளிலும் இவர் பல பதக்கங்களை வென்றுள்ளார். (8)

### மூத்திரைக்கு கோதுமைமா

வண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் மாணவர் மதிய உணவு முத்திரைக்கு சங்க கிளைகள் மூலம் கோதுமை மாவை வழங்கி வருகின்றது.

ஜுலை, ஆகஸ்ட் மாதங்களுக்கான மாணவர் மதிய உணவு முத்திரைகளுக்கே தற்போது மா வழங்கப்பட்டு வருகின்றது. (13)

### முடியும் 1991-ம் ஆண்டின் சில முக்கிய நிகழ்வுகள்:

| | |
|---|---|
| 01-01-1991 | தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் ஒருதலைப்பட்சமாக யுத்த நிறுத்தம் பிரகடனம். |
| 03-01-1991 | விடுதலைப்புலிகள் நிலையை ஆராயவென சிறிலங்கா அரசு 7 நாள்களுக்கு இராணுவ நடவடிக்கைகள் நிறுத்தம். |
| 10-01-1991 | விடுதலைப்புலிகள் இயக்கத்தின் யுத்த நிறுத்தப் பிரகடனத்தை நிராகரித்து சிறிலங்கா அரசு இராணுவ நடவடிக்கை தொடர்வதை அறிவித்தது, |
| 15-01-1991 | குவைத் நாட்டிலிருந்து வெளியேறுமாறு ஐக்கிய நாடுகள் சபை தீர்மானம் 660 மூலம் ஈராக்குக்கு காலக்கெடு விதிக்கப்பட்டது. |
| 17-01-1991 | அமெரிக்காவும் அதன் தோழமை நாடுகளும் ஈராக மீது தாக்குதல்களை ஆரம்பித்தன. |
| 18-01-1991 | இஸ்ரவேல மீது ஈராக் ஏவுகணைத் தாக்குதலை நடாத்தியது. |
| 20-01-1991 | சிறிலங்கா இராணுவம் வடக்கில் பாரிய இராணுவத தாக்குதல்களைத் தொடங்கியது. |
| 25-10-1991 | விடுதலைப்புலிகள் இயக்கம் போராட்டத்தை மீண்டும் தொடரப்போவதாக அறிவிப்பு. |
| 28-01-1991 | இந்திய வெளியுறவு அமைச்சர் வி.சி. சுக்லா சிறிலங்காவுக்கு 3 நாள்கள் விஜயம். |
| 30 01-1991 | கலைஞர் மு.கருணாநிதி தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழகத் தமிழக அரசு, மத்திய அரசினால் கலைக்கப்பட்டது. |
| 21 02-1991 | நிபந்தனைகளின்றி குவைத்தை விட்டு வெளியேற ஈராக் இணக்கம். சிறிலங்கா பாராளுமன்றத்தில் கைகலப்பு. எதிர்க்கட்சிகள் பாராளுமன்றத்தைப் பகிஸ்கரிக்க முடிவு. |
| 23-02-1991 | அமெரிக்க ஜனாதிபதி கொர்பசேவ்வின் சமாதானத் திட்டத்தை நிராகரித்து ஈராகமீது தரைவழி இராணுவ நடவடிக்கைக்கு உத்தரவு. |
| 26-02-1991 | 02-08-1990 இல் ஈராக்கினால் ஆக்கிரமிக்கப்பட்ட குவைத்திலிருந்து வாபஸ் பெறுமாறு ஈராக் ஜனாதிபதி சதாம் குசைன் தமது இராணுவத்துக்கு உத்தரவு. |
| 28-03-1991 | அமெரிக்கா தலைமையிலான பன்னாட்டு இராணுவத்தினர் காலை 10 30 மணிமுதல யுத்த நிறுத்தத்தை அறிவித்தனர். மடு தேவாலய அகதி முகாமில் தங்கியிருந்த அகதிகளை முகாமை விட்டு வெளியேற்றி மன்னாருக்கும், வவுனியாவுக்கும் செல்லுமாறு சிறிலங்கா அரசு உத்தரவு. |
| 02-03-1991 | சிறிலங்கா பாதுகாப்பு இணை அமைச்சர் றஞ்சன் விஜேரட்ன குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டார், |
| 04-03-1991 | இந்திரா காங்கிரஸ் கட்சியினர், ஹரியானா இரகசிய பொலிஸ் ராஜீவ் காந்தியின் நடவடிக்கைகளை வேவு பார்த்ததாகக் குற்றம்சாட்டி, இந்தியபாராளுமன்றத்தைப் பகிஷ்கரிப்பு. |
| 06-03-1991 | பிரதமர் சந்திரசேகர் பதவியை இராஜினாமாச் செய்து பாராளுமன்றத்தை கலைக்க சிபார்சு. |
| 13-03-1991 | பல்வேறு முயற்சிகளின் பின் இந்திய ஜனாதிபதி லோக சபையைக் கலைத்தார். |
| 11-05-1991 | சிறிலங்காவின் 237 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் நடைபெற்றது. வடக்குக் கிழக்கில் தேர்தல் இல்லை. |
| 20-05-1991 | இந்தியப் பாராளுமன்ற முதற்கட்ட வாக்களிப்பு நடைபெற்றது. |
| 21-05-1991 | ராஜீவ் காந்தி சிறிபெரம்புதூரில் குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டார். |
| 26 05-1991 | போராளிகள் சரணடையவெனக் கூறி வெசாக்கை முன்னிட்டு சிறிலங்கா இராணுவம் மூன்றுநாள் யுத்த நிறுத்தப் பிரகடனம். எதுவித சரணும் இல்லாமல் யுத்த நிறுத்தம் முடிவு. |
| 12-06-1991 | கொக்கட்டிச்சோலையில் 200 க்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழ் மக்கள் சிறிலங்கா இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்டனர். |

— 4 ஆம் பக்கம் பார்க்க

